


# அறிந்த கடுமையான பாடங்கள்: சுனாமிக்கு பதிலளித்தவர்களின் பாலின குறிப்புக்கள்

## பாலின குறிப்பு எண் 1: பதிலளிப்பு
## பாலினம்-அழிவு இணைகுழு

**ஜனவரி 2005**

**பெண்களும் குழந்தைகளும் சுனாமியால் பலவிதத்தில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டனர்:**

- பெண்களுக்கும் சிறுமியருக்கும் நீச்சல் கற்றுத் தரப்படவில்லை.
- தாய்மார் குழந்தைகளை காப்பாற்ற முயன்றனர்.
- சரீர சம்பந்தபந்தமான காரணங்கள் (கர்ப்பம், பெலன், ஆடைகள்)

**சிறுவரும் பெண்களும் அழிவு நிகழ்ந்த உடனே பெரும் பாதிப்புகுள்ளாகின்றனர். அவை:**

- இனப்பெருக்க ஆரோக்கியத்திற்கான மருத்துவ தேவைகள் (கர்ப்பம், மகப்பேறு)
- பாரம்பரியமாகவே சமுதாயம் பெண்களை சிறுமையாக எடைபோட்டு நடத்துவது.
- சமூகத்தில் பரவலாயிருக்கும் பாலின பாகுப்பாட்டுக் கண்ணோட்டம் பல சமயங்களில் வெளிப்படையாக உதவி தேட தடையாகவுள்ளது.
- அளவுக்கு அதிகமாக நிலவும் வறுமை, உணவு ஊட்டக்குறைவு, எழுத்தறிவின்மை.
- சமூகத்தைவிட்டு தாங்களே விலகியிருக்கும் பெண்கள் (விதவைகள், குடும்ப தலைவிகள்)
- சம்பாதிக்கும் வாய்ப்புகள் இல்லாமை, பொருளாதார தேவைகள் அதிகரித்தல்.
- ஆண்களின் தேவைகளும், அவர்கள் விருப்பங்களும் அளவுக்கு அதிகமாகவே வெளிப்படுத்தப்படுவது.

**அழிவு நிகழ்ந்த உடனே குறுகிய நேரத்தில் பெண்களுக்கும் சிறுமியருக்கும் ஏற்படும் தேவைகள்:**

- திடீரென நிதி உதவிகளை பற்றி முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலை.
- ஊடனடியாக தங்கும் வசதிகள், தற்காகாலிக குடியிருப்புகளை பற்றி சமூகத்தினர் நடத்தும் ஆலோசனை கூட்டங்களில் கலந்து கொள்வது.
- பாரம்பரியத்திற்கேற்ற சம்பிரதாயமான ஆடைகள்.
- ஒதுங்கிய தனிமையான கழிப்பிட வசதிகள்.

- கர்ப்பினி பெண்களுக்கும், புதிதாக குழந்தை பிறந்த தாய்மார்களுக்கும் ஆதரவு, அவர்களுக்கு பிரத்தியேக உணவு வசதிகள்.
- மத வழிபாடுகளை தொடர்ந்து செய்ய வழி வசதிகள்.
- பாலின பலாத்காரத்திலிருந்து பாதுகாப்பு (உணவுக்காக உடலுறவு பேரம் பேசும் சூழ்நிலைகளில்)
- சிறுவர் சிறுமியருக்கு கடத்தல் கும்பல்களிடமிருந்து பாதுகாப்பு.
- வருமான உதவி, பொருளாதார வளர்ச்சியை குறியாக கொண்ட மேம்பாட்டுத் தொழில்கள்.
- பரந்த மனப்பாண்மையோடு கிடைக்கும் ஆதரவுகள், உதவிகள்

**பாலின சமத்துவத்தை இப்போது புறக்கணித்தால், எதிர்காலத்தில் பாலினப்பாகுப்பாடு பெருகும் வாய்ப்புகள் உள்ளது. எனவே:**

- சமுதாயத்தில் ஏற்கனவே செயல்படும் பெண்குழுக்கள் மூலம் செயல்படவும்.
- சம்பவம் நிகழ்ந்த இடங்களில் வசித்த பெண்களை அழிவு கணித்தலுக்கும், மீட்பு பணிகளுக்கும் தெரிவு செய்யவும்.
- பெண் ஊழியர்களையும், தாங்களாகவே உதவ முன்வரும் பெண்களையும் தெரிவு செய்து, அவர்கள் மூலம் சம்பவம் நிகழ்ந்த இடங்களில் வசிக்கும் பெண்களை அணுகவும்.
- சம்பவம் நிகழ்ந்த இடத்தை பற்றி ஆழ்ந்த அறிவுடைய, சுயமாக செயல்படும் பெண் தலைவர்களின் உதவியை நாடவும்.
- குறுகிய-நீண்டகால மீட்பு பணிகளுக்கு பாலின கண்ணோட்டத்துடன் செயல்பட குழுக்களை தயாரிக்கவும்.
- "சமூக" கூட்டங்களிலும் - ஆலோசனைகளிலும், பெண்களின் முழுமையான ஈடுப்பாட்டை வற்புறுத்தவும்.

Translated for GDN by Ms Packia Yesudian

பாலினம்-அழிவு இணைகுழுவில் அங்கத்தினராக: http://www.gdnonline.org